## தொகுதிப் பங்கீடு : தி.மு.க. -எஸ்.டி.பி.ஐ. கட்சியுடன் பேச்சு வார்த்தை!



2026 சட்டமன்ற பொதுத்தேர்தலையொட்டி கூட்டணிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திட அமைக்கப்பட்ட கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் அண்ணா அறிவாலயத்தில் எஸ்.டி.பி.ஐ. கட்சி நிர்வாகிகள் தேசிய துணைத் தலைவர் தெகளான் பாகவி,மாநிலத் தலைவர் நெல்லை முபாரக்,மாநிலதுணைத் தலைவர் அச.உமர்பாரூக்,மாநில பொதுச்செயலாளர்ர் ஏ.கே.கரீம், வர்த்தகர் அணி மாநிலத் தலைவர் அமீர் அம்ஸா ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

## தொகுதிப் பங்கீடு : தி.மு.க. - முக்குலத்தோர் புலிப்படை கட்சியுடன் பேச்சு வார்த்தை!



2026 சட்டமன்ற பொதுத்தேர்தலையொட்டி கூட்டணிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திட அமைக்கப்பட்ட கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் அண்ணா அறிவாலயத்தில் முக்குலத்தோர் புலிபடை நிறுவனர் எஸ்.கருணாஸ் தலைமையில் நிர்வாகிகள் ஆர்.முத்துராமலிங்கம்,எம்.பெருமாள்,எம்.இராமு, எம்.கார்த்திக்,மணகரை மூர்த்தி ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

## தொகுதிப் பங்கீடு : தி.மு.க. - மனித நேய ஜனநாயக கட்சியுடன் பேச்சு வார்த்தை!



2026 சட்டமன்ற பொதுத்தேர்தலையொட்டி கூட்டணிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திட அமைக்கப்பட்ட கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் (28.2.2026) அண்ணா அறிவாலயத்தில் மனித நேய ஜனநாயக கட்சி தலைவர் மு.தமுமுன் அன்சாரி, பொதுச்செயலாளர் எம்.முமதுநாசர்,பொருளாளர் செய்யது முகம்மது பாரூக், துணைப் பொதுச் செயலாளர் தாஜ்தீன் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

## திருபுவனத்தில் முதல்வர் பிறந்த நாள் விழா!

சிவகங்கை, மார்ச் 2-

திருப்புவனத்தில் மேற்கு ஒன்றியம் பேரூர் திமுக சார்பில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் பிறந்த நாளை முன்னிட்டு திருப்புவனம் கோட்டை பகுதியில் ஆயிரத்துக்கு மேற்பட்ட பெண்களுக்கு மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் வசந்தி சேங்கை மாறன். தலைமையில் பேரூர் கழக செயலாளர் நாகூர்கனி முன்னிலையில் மாவட்டக் கழக துணைச் செயலாளர் பேரூராட்சி மன்ற தலைவர் சேங்கை மாறன் இனிப்பு வழங்கி போர்வைகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில். சேது ராஜன். ரகமத்துல்லாகான் ஏனாதி ராமலிங்கம். மாங்குடி வெங்கடேசன். சங்கங்குளம் ஈஸ்வரன். லாடனேந்தல் சுப்பையா. பூவந்தி அக்னிராஜ் மணிகண்டன். மடப்புரம் மகேந்திரன். புலியூர் ரவி. கரிசல்குளம் ராமு. கலியாந்தூர் இளங்கோவன் மீனாட்சிசுந்தரம். தேளி கோபால் அறிவுகரசு கண்ணன் மாரிதாசன் ராமலட்சுமி பாலகிருஷ்ணன் கோபி என்ற பாலகிருஷ்ணன்,காளிதாஸ் திருப்பதி கணேசன் கணேசபிரபு ராஜா ராஜா. அண்ணாமலை பாண்டியர் கிருஷ்ணன். நேரு. மற்றும் ஒன்றிய கழக. பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

## போற்றுகிறோம் எங்களில் ஒருவரே!



**வெ**ற்றி எல்லார்க்கும் எனும்
ஒற்றை உயர் இலக்கொடு
சற்றும் ஓயா தங்களின் உழைப்பால்
அற்றம் காக்கும் கல்வி
கற்றோம். உயர் திறனும்
பெற்றோம் நல் ஆட்சியில்
குற்ற மேதும் சூழாது நல்
ஏற்றமே கண்டோம் எல்லாரும்
தோற்றார் எவரும் இல்லை
உற்ற பெரும் பயனால்
கொற்றக் குடையின் கீழ்
சுற்றமெனச் சூழ்ந்தோம்
முற்றல் கழையிடை ஏறிய சாறாம்
நற்றமிழொடும் நாட்டொடும் ஒப்பு
அற்ற நம் இனமானம் காக்க
பொற்சுடர் ஏந்தும் மானுடப்
பற்றுள்ளம் கொண்ட தலைவரே
மற்றுமோர் அய்ந்தாண்டு அதன்பின்
மற்றுமோர் பத்தாண்டு வழிகாட்ட
மாற்றுக் கருத்தின்றி எல்லாரும்
ஒற்றுமையாகத் தொடர்வோம் தங்களை
நற்றுணையாய் இருப்போம் உறுதியாக
போற்றுகிறோம் எங்களில் ஒருவரே
மாற்றுக் குறையாப் பொன்னே வாழ்க
சற்றுங் குறையா நலமுடன் வாழ்க.

**புலவர் மா.நன்னன் மகள்**
**அவ்வை தமிழ்ச் செல்வன்**

## தொகுதிப் பங்கீடு : தி.மு.க. - தமிழக வாழ்வுரிமைக் கட்சி பேச்சுவார்த்தை!



2026 சட்டமன்ற பொதுத் தேர்தலையொட்டி கூட்டணிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திட அமைக்கப்பட்ட கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு தலைமையிலான தி.மு.க. குழுவினர், நேற்று முன்தினம் (28.02.2026) அண்ணா அறிவாலயத்தில், தமிழக வாழ்வுரிமைக் கட்சி தலைவர் தி.வேல்முருகன் தலைமையில், தலைமை நிலையச் செயலாளர் கண்ணன், மூத்த நிர்வாகிகள் ஜம்புலிங்கம், சுப.தனசேகரன், வேணு கோபால்ஆ கியோருடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

## பூம்புகாரில் அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

மயிலாடுதுறை மார்ச் 2–

மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோயில்செல்வம் சதுக்கத்தில் பி. மதிவாணன் நினைவரங்கத்தில் பூம்புகார் சட்டமன்றத் தொகுதி தமிழ்நாடு தலைகுனியாது திராவிட மாடல அரசின் சாதனை விளக்கப் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

பொதுக்கூட்டத்திற்கு மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம். முருகன் தலைமை தாங்கினார். செம்பனார்கோயில் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் பி.எம்.அன்பழகன் வரவேற்றார். தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம்.ஸ்ரீதர், ஒன்றிய கழக செயலாளர் செம்னார்கோயில் தெற்கு எம்.அப்துல் மாலிக், செம்பனார்கோயில் மத்தியம் அமிர்த.விஜயகுமார், குத்தாலம் மேற்கு ஏ.ஆர்.ராஜா, குத்தாலம் வடக்கு கு. வைத்தியநாதன், சீர்காழி கிழக்கு பஞ்சு.குமார், தரங்கம்பாடி பேரூர் செயலாளர் எஸ்.கே.முத்து ராஜா, பொதுக்குழு, உறுப்பினர்கள் ஜெ.கபிலன், நத்தம் ஏ. வின்செண்ட், ஹர்ஷத், தரங்கம்பாடி பேரூராட்சி தலைவர் சுகுணா சங்கரி குமரவேல், பரசலூர் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் த.சண்முகம், மாவட்ட ஆதி திராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் என.ஹிட்லர், கிளைக் கழக செயலாளர்கள் கே.பாலையா, கோ.கந்தசாமி, ஜே. சரவணன் ஏ. நாகராஜன், எஸ்.நாகராஜன், என். காமராஜ், டி.ரமேஷ், எஸ்.பாண்டியன், கே.சிலம்பரசன், எஸ்.ராமலிங்கம், ஆர்.செந்தில், எஸ்.சசி, மற்றும் ஒன்றிய பிரதிகள் முன்னிலை வைத்தனர்.

கூட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், தலைமை கழக செய்தி தொடர்பாளர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், கழக உயர்நிலை செயல் திட்டகுழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

கூட்டத்தில் மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர். அருள்செல்வம், கழக கொள்கை பரப்பு துணை செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், மாநில விவசாய தொழிலாளர் அணி இணை செயலாளர் ஜெக.வீரபாண்டியன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் ஏ.சி.என் .விஜயபாலன், எம்.எம். சித்திக், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஜி.என். ரவி, முத்து.மகேந்திரன், மாவட்ட கழக துணை செயலாளர்கள் மு.ஞானவேலன், கண்ணகி பன்னீர், சீர்காழி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ.ஜி.ஜெ.பிரபாகர், சீர்காழி நகர கழக செயலாளர் ம.சுப்பராயன், பொதுக்குழு உறுப்பினர்கள் சுபா. நெடுஞ்செழியன், பி.சிவதாஸ், முன்னாள் ஒன்றிய குழு தலைவர்கள் பி. பாஸ்கர், தியாக. விஜயேஸ்வரன், கே.மகேந்திரன், மருத்துவர் அணி எஸ்.வீரபாண்டியன், கோசி.மதி.திரு மாவளவன், ஜே ..,மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் காளி தேசப்பன் ஆர்.எஸ்.ஸ்ரீதர், வி.எஸ். பிரபாகர், செம்பனார்கோவில் வடக்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் இரா.சுப்பையன், எஸ்.தென்னரசன், ஜி.ஆர். பிரபாகரன், கே.சத்யராஜ், அமுதா. அன்பழகன், ஏ சரவணன் பி. கௌதம், செம்பனாரகோயில் தெற்கு. மத்திய ஒன்றிய நிர்வாகிகள் க.இளங்கோவன் உள்ளிட்டோர் நேரமா கலந்து கொண்டனர் முடிவில் செம்பனார்கோவில் வடக்கு ஒன்றிய துணை செயலாளர் ஜி.நெடுஞ்செழியன் நன்றி கூறினார்.

## ஆயத்தமாகும். அன்னைத்தமிழகம்!

**உ**லகின் அசைக்க முடியாத
வல்லரசாகத் திகழும் அமெரிக்கா
தான்

உலகில் அதிகமாக கடன் வாங்கி
யுள்ள முதல் நாடாக இருக்கிறது.

ஆம் ...

ஒரு நாடு
அனைத்துத் துறைகளிலும்
தன்னை
முன்னணியில் நிறுத்திட பெறப்படும்
மூலதனச் செலவுகளுக்கான
கடன் என்பது
அந்த நாட்டுக்கான வளர்ச்சிக்கு
உதவுவதோடு
அது மறைமுகச் சொத்தாக
உருவெடுக்கும் என்பதாகும்..

உதாரணமாக

ஒரு குடும்பம்
அதன்
வளர்ச்சிக்காக
அக் குடும்பத்துப் பிள்ளைகளின்
கல்விக்காக
அல்லது தொழில் முதலீட்டுக்காகப்
பயன்படுத்துகிற கடன்
அக்குடும்பத்தின் வளர்ச்சிக்கு
அடிப்படையாகி
அதுவே
ஆஸ்திகளை விசாலமாக்கும்
முதலீட்டுச்
சொத்தாக மாறுகிறது..

இது


மாதம்
இருபதாயிரம் சம்பாதிக்கும்
ஒரு தொழில் முனைவோன்
இரண்டு லட்சம்
கடன் பெற்று
தன் தொழிலை மேம்படுத்தி
லாபத்தைக் கூடுதலாக்கி வளர்ச்
சியை விசாலப்
படுத்துவது போன்றதாகும்..

அது போலத்தான்

மத்திய ரிசர்வ் வங்கியின்
கட்டுப்பாட்டு
அளவுக்குள்
தன் கடன் அளவை நிர்வகித்து
வரும் தமிழ்நாடு
கல்வி, சுகாதாரம்,
தொழில் வளர்ச்சி, உட்கட்டமைப்பு
என அனைத்துத் துறைகளிலும்
நாட்டிலேயே
முதல் மற்றும் இரண்டாம்
இடங்களைப் பிடித்து

நாட்டின் ஒட்டுமொத்தப்
பொருளாதார வளர்ச்சியில்
11.19 சதவீதம் என்னும் இமாலயச்
சாதனையை நிகழ்த்தி

தேசத்தின்
வளர்ச்சி
அளவை விட
இரட்டிப்பு வளர்ச்சி என்னும்
பெருமையைப் பெற்றுள்ளது..



மேலும்

ஜி.எஸ்.டி. வருமானவரி
ஆகியவற்றில்
தனது கூடுதல் பங்களிப்பால்
நாட்டுக்கும் பெரும்
பங்காற்றுவதோடு
இந்தியாவுக்கே
முதுகெலும்பாகவும்
மூளையாகவும் தமிழ்நாடு
திகழ்கிறது

அதுவும்
மத்தியில ஆளும் ஒன்றிய பா.ஜ.க.
அரசின் ஒத்துழையாமையோடு
என்பது குறிப்பிடத்தக்கதாகும்..

இந்தப் பெருமிதத் தோரணங்க
ளுக்கும் பெருமைகளின்
அணிவகுப்புக்கும்
காரணமாகத் திகழும்
திராவிட மாடல் நாயகர்
முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்
அவர்களுக்கு
நன்றி செலுத்த தமிழகம் தயாரா
கிக் கொண்டிருக்கிறது..

முறையாகத் திட்டமிட்டு
முன்னேற்றம்
என்பதையே
முதல் இலக்காகக் கொண்டு
அதற்காக முழுமூச்சாக
முக்காலமும் உழைத்து

முட்டுக்கட்டைகளை வெற்றிக்
கோப்பைகளாக மாற்றும்
வித்தை அறிந்த வெற்றியாளராக

மக்களை
முறை செய்து காக்கும்
மன்னவராக

உலகம் விழித்துப் பார்க்கும்
ஒப்பில்லா
முதல்வராகத்
திகழும்

அந்த

'முத்துவேல்
கருணாநிதி ஸ்டாலின்' எனும்

மக்கள்
தலைவருக்கு
மாசற்ற
முதல்வருக்கு

ஒட்டுமொத்தத்
தமிழக மக்களும்
தங்களின்
ஒருவிரல்
புரட்சியால்
நன்றி கூறும்

அந்த
மகோன்னத
நாளுக்கு
மக்கள் திருவிழாவிற்கு

அன்னைத் தமிழ்நாடே
ஆயத்தம்..

ஆம்..

'மீண்டும்
ஸ்டாலின்

வேண்டும்
ஸ்டாலின்'

என்னும்
மந்திர மொழியை

உரக்கச்
சொல்லக் காத்திருக்கும்
எந்திரங்களோடு..

**என்னநாஞ் சொல்றது**



**மருது அழகுராஜ்**
*கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்*